
பக்கங்கள்: 06
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை 08.01.2021 கதிர் 295

## இலங்கையர்களை அழைத்து வர 11 முதல் விசேட விமான சேவை!

கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் பணியில் விசேட விமான சேவைகள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

- இவ்வாறு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை 2

# தமிழர்களைப் படுகொலை செய்தவர்களுக்கு பதவி உயர்வுகளும்,பதக்கங்களும், மன்னிப்பும்



## நாடாளுமன்றில் வைத்து அரசை தோலுரித்துக் காட்டினார் விக்கி

பாதுகாப்புத் துறைகளில் வேலை செய்பவர்கள் தவறிழைத்தால், அவர்களுக்கான தண்டனையை நடைமுறைப்படுத்துவதே வழமையான நடைமுறையாக இருந்தாலும், இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்தவர்களுக்கு பதவி உயர்வுகளும், பதக்கங்களும், மன்னிப்பும் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய அரசு எல்லா மக்களுக்குமான 2

## விமலுக்கு எதிராக ரிஷாத் முறைப்பாடு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் 2

# மாகாணசபைத் தேர்தல் நடக்கவே நடக்காதாம்!

## அடித்துக் கூறுகிறார் டலஸ்



**கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது. புதிய தேர்தல் முறைமையில் மாகாணசபைத் தேர்தலை எதிர்காலத்தில் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.**

**நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமையின் சாதக தன்மையை உள்ளடக்கி முரண்பாடற்ற தேரதல் முறைமை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என மின்சாரத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.** 2

## கொரோனாத் தொற்றையடுத்து

## பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவும் பூட்டு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தற்காலிகமாக இன்று முதல் மூடப்பட்டுள்ளது. 2




# வடக்கில் 161 விபத்துக்களில் 172 பேர் கடந்த ஆண்டு சாவு!

## முந்தைய ஆண்டை விடக் குறைவாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.09

வடக்கின் 5 மாவட்டங்களிலும் 2020 ஆம் ஆண்டு 161 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளமையோடு இதன்போது 172 பேர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்ற 5 மாவட்டச் 2

# தயாசிறிக்குக் கொரோனாத் தொற்று; அமைச்சர்கள் பலர் தனிமைப்படுத்தல்



இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்எனப்பலரும்தனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார அமைச்சால் இது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கின்றது 2

# தயாசிறி ஜயசேகர இம்மாதம் நாடாளுமன்று செல்லவில்லை

## சபை நடவடிக்கையை நடத்துவதில் பிரச்சினை இல்லையாம்


கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடந்த 5 ஆம் திகதி முதல் நாடாளுமன்றம் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற படைகள் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு 2

# மஹர சிறையில் 11 பேர் சாவுக்கும் துப்பாக்கிச்சூடே காரணம் என உறுதி

## சகலரினதும் பிரேத பரிசோதனை அறிக்கைகளும் வத்தளை நீதிவான் நீதிமன்றில் இன்று சமர்ப்பிப்பு



மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது உயிரிழந்த 11 பேரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமை உறுதியாகியுள்ளது.

வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைகள் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## தயாசிறிக்குக் கொரோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான தயாசிறி ஜயசேகரவுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அவர் காலி - ஹிக்கடுவ பகுதியிலுள்ள விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அவருடன் அண்மைக்காலமாக நெருங்கியிருந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தனிமைப்படுத்திக் கொள்ளும்படி சுகாதார அமைச்சின் ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தயாசிறி ஜயசேகர .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமானது.

தாம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனத் தயாசிறி ஜயசேகர தனக்கு அறிவித்ததன் பின்னர், நாடாளுமன்றத்திலுள்ள சி.சி.ரி.வி. கமராக்களை ஆராய்ந்ததில் அவர் நாடாளுமன்றத்துக்குக் கடந்த சில தினங்களில் வருகை தரவில்லை என்பது உறுதியாகியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனால், நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதில் எந்தவித பிரச்சினையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மஹர சிறையில் 11 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இடம்பெற்றபோதே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் ஏற்பட்ட கடும் காயங்களினாலேயே 11 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய புத்திஜீவிகள் குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த 8 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் இதற்கு முன்னர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், எஞ்சிய 3 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் இன்று நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

## வடக்கில் 161 விபத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்கள், பொலிஸார், பாதுகாப்பு படையினர், துறைசார் அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே மேற்படி தகவல் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 2020ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69 விபத்துக்களில் 71 பேர் உயிரிழந்துள்ளனர். 2019ஆம் ஆண்டு 86 விபத்துக்களில் 86 பேர் உயிரிழந்திருந்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 34 விபத்துக்களில் 34 பேர் உயிரிழந்திருந்தனர். 2019ஆம் ஆண்டு 44 விபத்துக்களில் 44 பேர் உயிரிழந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 16 விபத்துக்களில் 18பேர் உயிரிழந்த நிலையில் 2019ஆம் ஆண்டு 36 விபத்துக்களில் 38 பேர் உயிரிழந்திருந்தனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டத்திலே 2020ஆம் ஆண்டு 31 விபத்துக்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். இருப்பினும் 2019ஆம் ஆண்டு 21 விபத்துக்களில் 21 பேர் உயிரிழந்தனர்.

இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு 11 விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்தமை போன்று 2019ஆம் ஆண்டு 16 விபத்துக்களில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 2019ஆம் ஆண்டு 203 விபத்துக்கள் இடம்பெற்றபோது 206 பேர் உயிரிழந்தனர். 2020ஆம் ஆண்டில் 161விபத்துக்களில் 172 பேர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மாகாணசபைத் தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்புறுபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கொவிட் -19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படமாட்டாது என்பதை உறுதியாக குறிப்பிடமுடியும். தேர்தல்முறைமையில் பாரிய சிக்கல் தன்மை காணப்படுகிறது. இதற்கு பல்வேறு அரசியல் மற்றும் பொது காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

மாகாணசபை தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையுடன் தொடர்புபட்டுள்ளது. ஆகவே மாகாண சபைதேர்தலை புதிய தேர்தல் முறையில் எதிர்காலத்தில் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தல் சிறந்த நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் மூல கொள்கையின் நோக்கம் மறுதளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேர்தல் முறைமை நகைப்புக்குரியதாகக் காணப்படுகிறது. அரச நிர்வாகம் - ஜனாதிபதி, நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றம் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் மாத்திரம் இது வரையில் சிறந்த தேர்தல் முறைமை ஊடாக நடத்தப்பட்டுள்ளது. ஏனைய தேர்தல்கள் காலத்திற்கு காலம் மாறுபட்ட தேர்தல் முறைமைகளில் நடத்தப்பட்டுள்ளன. இது பொருத்தமற்றதாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமைகளின் சாதக தன்மைகளைப் பாதுகாத்து, முரண்பாடற்ற தேர்தல் முறைமையைப் புதிய அரசமைப்பின் ஊடாக அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தல்களை நடத்தும் தேர்தல் முறைமை முரண்பாடற்றதாகக் காணப்பட வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சேவைக் கைத்தொழில் பல மீண்டும் சுகாதார பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொவிட் - 19 வைரஸ் காரணத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை அரசாங்கத்தின் பலவீனம் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றமை பொருத்தமற்றதாகும். பாரிய சவால்கள் எழுந்துள்ளன. அனைத்து சவால்களையும் அரசாங்கத்தால் மாத்திரம் வெற்றிக் கொள்ள முடியாது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் சவால்களை வெற்றிக்கொள்ள நாட்டு மக்கள் சுகாதார தரப்பினருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றமுடியாதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை பாதுகாப்பு தரப்பினரால் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்னெடுக்கும் நடவடிக்கையாகும். வெகுவிரைவில் அனைத்து சவால்களையும் மக்களின் ஒத்துழைப்புடன் வெற்றிக்கொள்ள முடியும். - என்றார்.

## பல்கலை மானியங்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனை நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

அங்கு கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் அவர் மேலும் கூறினார்.

## விமலுக்கு எதிராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை அறிக்கைகள் வெளிவருவதற்கு முன்னர், அது தொடர்பில் தன்னைச் சம்பந்தப்படுத்தி குற்றஞ்சுமத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸவின் நடவடிக்கைகள் குறித்து, அதே ஆணைக்குழுவில் அகில மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் இன்று (08) முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளார்.

தனது சட்டத்தரணி ருஷ்தி ஹபீபுடன் இணைந்து, இந்த முறைப்பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் செய்துள்ளார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், விமல் வீரவன்சவின் இனவாதக் கருத்துக்களையும், அப்பட்டமான பொய்களையும், பிழையான குற்றச்சாட்டுக்களையும் கண்டித்ததுடன், அது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு உரிய கவனம் செலுத்தும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாஸா விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் கூறியதாவது:-

கொரோனா ஜனாஸாக்களை தொடர்ந்தும் எரிக்க வேண்டும் என்ற அரசின் நிலைப்பாடு அப்பட்டமான பழிவாங்கல் நடவடிக்கை ஆகும். இலங்கை வாழ் இருபது லட்சம் முஸ்லிம்களும் இன்று வெந்து, நொந்து போயுள்ளனர். அதுமாத்திரமின்றி, உலகிலுள்ள சுமார் இரண்டு பில்லியன் முஸ்லிம்களும் கவலையில் இருப்பதோடு, பல நாடுகள் இலங்கைக்கு எதிரான எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றன. இதன் விளைவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி, நாட்டையும் சமூகங்களையும் பாதிக்கும்

முஸ்லிம் சமூகத்தை இந்த அரசு பழிவாங்குவதற்காகவே எமது மத உரிமையை தடுத்து நிறுத்துகின்றது. அரசியலில் ஞானம் உள்ளவர்களாக இருந்தால் இவ்வாறான பிற்போக்குத்தனமான, படுகேவலமான செயலைச் செய்யமாட்டார்கள். முஸ்லிம் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மனிதநேயமுள்ள மாற்று மத பிரமுகர்களும் இதனை வென்றெடுப்பதில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் தமிழ் எம்.பிக்கள், சிங்கள எம்.பிக்கள் உட்பட சிவில் சமூக ஏற்பாட்டாளர்களும் இதற்காக குரல் எழுப்பி வருகின்ற போதும், அரசும் சுகாதார அமைச்சும் இன்னும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலதான் இருக்கின்றன.

எத்தனையோ பேச்சுகள், ஆர்ப்பாட்டங்களை எல்லாம் புறக்கணித்து, கருத்திற்கெடுக்காது, சமூகத்தின் மதம் சார்ந்த கோரிக்கையை தட்டிக்கழிப்பதன் நோக்கம் வெறுமனே அரசியல் சார்ந்தது மட்டுமே. அரசுக்கு ஆதரவளிக்கும் எம்.பிக்கள், இன்று சரிவரும், நாளை சரிவரும் என்ற நம்பிக்கையை அளித்து வருவதினாலேயே, சமூகம் இன்னும் பொறுமை காக்கின்றது.

'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்கக் கூடாது' என்ற கோரிக்கையும் எழுந்து வந்தது. எனினும், எதுவுமே நடந்ததாகத் தெரியவில்லை. புதிய நிபுணர் குழுவின் அறிக்கையைக் கூட தட்டிக்கழிக்கும் சுபாவத்தில் தான் இன்னும் இருக்கின்றனர் - என்றார்.

## இலங்கையர்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதற்கமைய எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் இவ்விசேட விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

விமான சேவைகளை அதிகரிக்க ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சையடுத்து இதற்கான இணக்கம் எட்டப்பட்டது எனவும் அவர் கூறினார். இந்த நடவடிக்கைகளை ஆளும் கட்சியினர் கண்காணிக்கவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினரும் இணைந்து கண்காணிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தவறுகளைச் சுட்டிக்காட்டுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

அதேபோன்று, பணம் செலுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்படுவது கட்டாயமானதல்ல எனவும், விரும்புபவர்கள் மாத்திரம் அவ்வாறு பணம் செலுத்தி தனிமைப்படுத்தலுக்குச் செல்ல முடியும் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# நானே சு.கவின் தலைவர்

### மைத்திரி சட்டவிரோத தலைவர்; சந்திரிகா அம்மையார் அதிரடி



தானே தற்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் 122 நினைவு தினம் காலி முகத்திடலில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு முன்பு இன்று காலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுனேத்ரா பண்டாரநாயக்க ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்

இதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலரஞ்சலி செலுத்தினார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பின்வருமாறு பதிலளித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

கேள்வி:- உங்கள் தந்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- என்ன நினைக்க வேண்டும்.?

கேள்வி:- சுதந்திரக் கட்சி பயணிக்கும் பாதை சரியானதா?

பதில்:- எந்தப் பயணமும் இல்லை. இதில் சரி, பிழை எனக் கூறுவது எப்படி?

கேள்வி:- சுதந்திரக் கட்சிக்கு தற்போது அநீதி இழைக்கப்படுவதாக தற்போது இருப்பவர்கள் கூறுகின்றார்களே?

(05ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களைப் படு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு அல்ல என்பதை சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய நிலைமை சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு வாக்களித்த பௌத்த, சிங்கள மக்களின் விருப்பங்களுக்கு அமைவாகவே செயற்பட முடியும் என்று ஜனாதிபதி மற்றும் அரச உறுப்பினர்கள் வெளிப்படையாகவே கூறிவருகின்றனர்.

இலங்கையர்களாக நாம் முன்னோக்கிச் செல்லப் போகின்றோமா அல்லது தொடர்ந்தும் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக, இனங்களாகப் பிரிந்து, பின்னோக்கிச் செல்லப் போகின்றோமா என்பதை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டமன்றி, நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் பதியப்பட்டிருந்தால், அத்தனை பேரும் தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் எப்போதோ விடுதலை செய்யப்பட்டிருப்பார்கள்.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகளை உடனே மன்னித்து விடுதலை செய்ய வேண்டும் என்று இந்தச் சபையில் கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இங்கு மனித உரிமை மீறல்கள் யுத்தத்துடன் முடிந்து விடவில்லை

கனடாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் முன்னாள் விமானப் படைத் தளபதி ஏயார் சீவ் மார்ஷல் சுமங்கல டயஸை ஏற்புடையவர் அல்லர் என அறிவித்து, அவரது நியமனத்தைக் கனடா அரசு நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை கனடா நாட்டின் உள்ளூர் செயற்பாட்டுக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இத்தகைய கோரிக்கைகள் இலங்கையின் படை அதிகாரிகள் மீது வைக்கப்பட்டு வருவதை நாம் தொடர்ந்து அவதானிக்க முடிகின்றது.

யுத்த காலத்தில் இலங்கைப் படைகளின் மூத்த அதிகாரிகளாக இருந்த ஐம்பத்திரண்டு படையினருக்கு விஸா அனுமதி வழங்குவதில்லை என்று மேற்குலகின் சில பிரதான நாடுகள் முடிவு செய்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

நல்ல விடயம்தான். மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோரை உரிய முறையில் 'கவனிப்பதும்' இன்றியமையாததுதான்.

ஆனால் அது ஒரு தலைபட்சமானதாக மட்டும் இருக்க முடியாது. இருக்கக் கூடாது.

ஆக யுத்த முனைகளில் மட்டும்தான் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்தன, நிகழ்கின்றன என்ற மாதிரியும், யுத்தத்தின் பின்னர் அவை இல்லை என்ற நம்பிக்கையில் விடயங்கள் கட்டவிழ்கின்றன என்பது போன்றும் தோன்றுகின்றது.

அப்படியான நிலைப்பாடு தப்பானது. யுத்த முனையில் – யுத்த வலயப் பிரதேசங்களில் – மனித உரிமை மீறல்கள் மோசமாக நிகழ்ந்தன என்பது உண்மைதான்.

ஆனால், அதற்கு வெளியிலும், அதன் பின்னரும் கூட மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்களை ஒத்த மனித கொடூரங்கள் தாராளமாக நடந்தன; நடந்து கொண்டிருக்கின்றன.

யுத்தத்தைப் புரிகின்ற ஆயுதம் தாங்கிய தரப்பினருக்கு அப்பாலும் பல தரப்பினர் மோசமான மனித உரிமை மீறல்கள் கொடூரங்களில் ஈடுபட்டனர், ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அவை சரியாக அவதானிக்கப்பட்டு, சர்வதேச கவனிப்புக்கும் பரிசீலனைக்கும் உள்ளாகவில்லை என்பதுதான் கவலைக்குரிய நிலையாகும்.

யுத்த சமயத்தில் கனடா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த அரசியல் வாதிகள், செயற்பாட்டாளர்களுக்கு எதிராக விஸா வழங்குவதில் கடும் கெடுபிடிப் போக்கைக் கையாண்டிருந்தன.

ஆனால், இலங்கையில் யுத்தக் குற்றங்களைப் புரிந்ததாகக் கூறப்படும் அரச படைகளுக்கு ஆதரவான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்த – தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மையினர் மோசமாக நடத்தப்படுகின்ற நிலைமைக்கு ஆதரவளித்த – தென்னிலங்கை அரசியல் பிரமுகர்கள், பேரினவாத வெறிப்போக்குச் செயற்பாட்டாளர்கள் விடயத்தில் அத்தகைய இறுக்கத்தை மேற்கு நாடுகள் யுத்த காலத்திலும் கடைப்பித்ததாகத் தெரியவில்லை; இப்போதும் கடைப்பிடிக்கவில்லை.

யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கடந்து விட்டன. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் விடயத்தில் பாதிக்கப்பட்ட தமிழருக்கு நீதி கிடைக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க, தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் நீடிக்கின்றன என்பதுதான் மனவருத்தத்துக்குரிய நிலைமையாகும்.

தமிழருக்கு நீதி வழங்க வேண்டி நீதித்துறை, தமக்கு நீதி வழங்குவதில் பேரினவாதமாக நடந்து கொள்கின்றது எனத் தமிழர்கள் கருதுகின்றார்கள்.

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனஸாக்களையும் தகனம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் நிபுணத்துவ அறிக்கை – தீர்மானம் – இனவெறிப் போக்கிலும், இன மேலாதிக்கத் திமிரிலும் மேற்கொள்ளப்பட்ட பாகுபாட்டு நடவடிக்கை அல்லது இன ஒதுக்கல் செயற்பாடு எனப் பாதிப்புற்ற முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர்.

இந்த உரிமை மீறல்களுக்கு எதிராக முஸ்லிம்கள் மேற்கொண்ட சட்ட முறையீட்டை காரணம் கூடக் காட்டாமல் உயர் நீதிமன்றம் விசாரணைக்கே எடுக்காமல் நிராகரித்து விட்டது.

இந்த விடயங்களில் நிபுணத்துவத் தகைமையின் பெயரிலும், நீதி அதிகாரத்தின் பெயரிலும் தமது மனித உரிமைகள் மீறப்பட்டு, தாங்கள் ஓர் வஞ்சகமாகப் பார்க்கப்பட்டு, புறம் ஒதுக்கப்பட்டுள்ளனர் என்று முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு இலங்கை நீதிமன்றங்கள் சுயாதீனத் தகுதி உடையவை அல்ல என்று தமிழர் தரப்புக் கூறுவது போல யுத்தத்தின் பின்னரான விடயங்களை விசாரிக்கும் விவகாரத்திலும் அந்த நீதிமன்றங்கள் தகுதியற்றவை மற்றும் இனவாத ரீதியில் செயற்படுபவை என்பதுதான் நிலைமை.

இவற்றுக்கு சர்வதேசம் வழங்கப் போகும் நீதி என்ன?

முடக்கப்பட்ட மட்டக்களப்பு

# காத்தான்குடி எல்லைக்குள் இராணுவத்தினர் பாதுகாப்பு



## அரசாங்க அதிபர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.08

தனிமைப்படுத்தப்பட்டு, முடக்கப்பட்ட மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறி வீடுகளை விட்டு வெளியேறி, வீதிகளில் நடமாடுபவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை திறப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் இராணுவ பாதுகாப்பு நடைமுறைப் படுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கணபதிப்பிள்ளை கருணாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

கொரோனா தொற்றின் அச்சுறுத்தல் காரணமாக பொது மக்களின் சுகாதார நலன் கருதி கடந்த ஒரு வார காலமாக பூரண முடக்கம் பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இந்த நிலையில் கடந்த நாள்களாக எமது பிரதேசத்தில் எடுக்கப்படுகின்ற ரபிட் அன்டிஜன் பரிசோதனையின்படி தொடர்ச்சியாக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றமை மிகப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

எனவேதான் இவ்வாறான தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு தொடர்ச்சியாக காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் முடக்க நிலையை முறையாக பின்பற்றப்படாமையை எல்லோராலும் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டதுடன், இது தொடர்பாக மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. இறுக்கமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியினர் எடுத்துள்ளனர்.

இதன்படி இராணுவப் பாதுகாப்பு நடைமுறைகள் காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி வீதியில் நடமாடுகின்றவர்கள், வீட்டுக்கு வெளியே வருகின்றவர்கள் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பொலிஸாருக்கு இறுக்கமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை அனுமதியின்றி வெளியில் வாகனங்களில் நடமாடுகின்றவர்களது வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடைமை ஆக்கப்படும். அனுமதியின்றி கடைகளைத் திறந்து வியாபாரம் செய்கின்றவர்களுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது!

அம்பாறை, ஜன.09

அம்பாறையில் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனடிப்படையில் கிழக்கில் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் கொரோனா தொற்றால் 46 வயதுடைய ஒருவர் நேற்று (வியாழக்கிழமை) உயிரிழந்துள்ளார் என வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை உகன பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர், கொரோனா தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளமையுடன் கிழக்கில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,500 ஐக் கடந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 25 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு பொலிஸார் உட்பட 25 பேருக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்று!

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 25 பேருக்கு கொரோனாத் தொற்று கடந்த வியாழக்கிழமை கண்டறியப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொண்டுவரும் எழுந்தமானமாக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் ஏறாவூர் சுகாதார பிரிவில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 3 பேருக்கும், காத்தான்குடி சுகாதார பிரிவில் 20 பேருக்கும், வெல்லாவெளி சுகாதார பிரிவில் ஒருவருக்கும், மட்டக்களப்பு சுகாதார பிரிவில் ஒருவருக்கும் என 25 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ளதுடன் காத்தான்குடியில் 146 ஆக அதிகரித்துள்ளது. எனவே, பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள சுகாதார முறைகளைப் பேணி செயற்படுமாறு அவர் தெரிவித்தார்.

# குளங்களின் வான்கதவு திறக்கப்பட்டமையால் மட்டக்களப்பில் விவசாய நிலங்கள் பாதிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த மழை மற்றும் கடும் வெள்ளம் காரணமாக உன்னிச்சைகுளத்தின் நீர்மட்டம் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

மேலும் உன்னிச்சைகுளத்தின் நீர்மட்டம் 31அடியாக காணப்படுவதன் காரணமாக குளத்தின் மூன்று வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக வவுணதீவு பகுதியில் பெருமளவான வயல் நிலங்கள் வெள்ள நீரால் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

அதாவது, நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வயல்கள் அறுவடைசெய்யும் காலமாகவுள்ள நிலையில் இவ்வாறு வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# காஷ்மீரில் பனிப்பொழிவு அனர்த்தத்தில் சப் இன்ஸ்பெக்டர் உட்பட இருவர் பலி



காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு காரணமாக சப் இன்ஸ்பெக்டர் உட்பட 2 பேர் பலியானார்கள்.

ஸ்ரீநகரின் ஹஸ்ராத்பால் பகுதியில் உள்ள முன்னாள் எம்.எல்.ஏ. செய்யது எம். அக்கூன் என்பவரது வீட்டில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையை சேர்ந்த சப் – இன்ஸ்பெக்டர் எச்.சி.முர்மு என்பவர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அதிக பனிப்பொழிவு காரணமாக திடீரென வீட்டின் கூரை இடிந்து விழுந்தது. 'இதில் சப் – இன்ஸ்பெக்டர் படுகாயம் அடைந்தார். உடனே அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதேபோல் குப்வாரா மாவட்டம் ஷா மொகல்லா திரிக்காம் என்ற இடத்திலும் பனிப்பொழிவு காரணமாக கூரை இடிந்து விழுந்ததில் ராணி பேகம் என்ற மூதாட்டி உயிரிழந்தார்.

# கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்து கொலை தப்பியோடிய முக்கிய குற்றவாளி பூசாரி கைது



உத்தரப்பிரதேசத்தில் பதுவான் கிராமத்தில் அங்கன்வாடிப் பெண்ணை பலாத்காரம் செய்து தப்பியோடிய கோவில் அர்ச்சகர் சத்ய நாராயண் பக்கத்து கிராமத்தில் கைது செய்யப்பட்டார்.

இரண்டு நாள்களுக்கு முன்பு மூன்று பேர் அங்கன்வாடி பெண் ஊழியரை கோவிலுக்குள் வைத்து கூட்டு பலாத்காரம் செய்து மிகவும் கொடூரமான முறையில் நிர்பயா கொலையை நினைவுபடுத்தும் வகையில் கொலை செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் இரண்டு பேர் உடனடியாக கைது செய்யப்பட்ட போதும் முக்கியக் குற்றவாளியான கோவில் அர்ச்சகர் சத்யநாராயண் தப்பிவிட்டார். இந்நிலையில் அவரை தனிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இதனிடையே பெண்கள் தனியாக வீட்டை விட்டு செல்லக்கூடாது என்று தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் சந்திரமுகி தேவி கூறிய கருத்து கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

### ஈயப் பித்தளைக்குள் 31 பவுண் தங்கத்தை மறைத்து

# திருடர்குல திலகங்களையே 'சீட்டிங்' செய்த இல்லத்தரசி

சென்னையில் வெளியூர் சென்றிருந்த நிலையில் பித்தளை பாத்திரங்களுக்குள் 31 பவுண் நகையை ஒளித்து வைத்திருந்ததால் அது திருட்டுப் போகாமல் தப்பிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சென்னையை அடுத்த ஆவடி பருத்திப்பட்டு பகுதியை சேர்ந்த தேவராஜன் என்பவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இவருக்கு சங்கீதா என்ற மனைவியும் இரு மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர்.

கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி தன் மனைவியின் சொந்த ஊரான ஓசூருக்கு தேவராஜன் குடும்பத்துடன் சென்றிருந்தார். வெளியூர் செல்லும் போது, நகைகளை பீரோக்களில் வைக்காமல் அவற்றை எடுத்து பித்தளை பாத்திரங்களில் எடுத்து ஒளித்து வைத்து விட்டு செல்வது சங்கீதாவின் வழக்கமாக இருந்துள்ளது. ஏனென்றால், திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்தால் அவர்களின் முதல் குறி பீரோக்கள் மீதுதான் இருக்கும். பீரோக்களை உடைத்து உள்ளே தங்க நகைகளை தேடுவதைதான் கொள்ளையர்கள் முதல் வேலையாகச் செய்வார்கள்.

தேவராஜன் குடும்பத்தினர் வெளியூருக்கு சென்றுள்ள நிலையில், அவரின் வீட்டுக்குள்ளும் நேற்று முன்தினம் இரவு கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். வீட்டிலிருந்த 4 பீரோக்களையும் உடைத்து நகைகள் இருக்கின்றனவா என்று பார்த்துள்ளனர். ஆனால், பீரோக்களில் குண்டுமணி நகை கூட இல்லாததால் ஏமாற்றமடைந்த திருடர்கள் வெறுங்கையுடன் அங்கிருந்து ஓடி விட்டனர். நேற்று காலை தேவராஜனின் வீடு உடைக்கப்பட்டு கிடப்பதை கண்டு அக்கம்பக்கத்தினர் பொலிஸுக்கும் தேவராஜனுக்கும் தகவல் தெரிவித்தனர். உடனடியாக, தேவராஜன் தன் குடும்பத்துடன் வீடு திரும்பினார். ஆனால், அவரின் மனைவி தங்க நகைகளை பித்தளை பாத்திரங்களுக்குள் ஒளித்து வைத்து விட்டு சென்றமையால் 31 பவுண் நகையும் கொள்ளையர்களிடத்தில் இருந்து தப்பியது. இது குறித்து சங்கீதா கூறுகையில், "கொள்ளையர்களிடத்தில் இருந்து நகைகள் தப்பியது மகிழ்ச்சியாக இருக்கிறது. இருப்பினும், தங்கள் வீட்டுக்கு கொள்ளையடிக்க வந்தவர்களை பிடித்து தக்க தண்டனை அளிக்க வேண்டும்" என்கிறார்.

கணவர் தேவராஜன் நகைகளைக் காப்பாற்றிய தன் மனைவியை 'சொக்கத் தங்கம்' என்று புகழ்ந்து தள்ளுகிறார்!

# தாயையும் பெற்ற சிசுவையும் சுமந்து சென்ற இராணுவத்தினர்



சாலைகளை பனி மூடியதால் வீட்டுக்கு திரும்ப முடியாமல் பரிதவித்த தாயையும், சேயையும் மூன்றரைக் கிலோ மீற்றர் சுமந்து பாதுகாப்பாக சேர்த்தனர் இராணுவ வீரர்கள்.

ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசம் சோபூரில், பனியால் சாலை மூடியதன் காரணமாக, பிரசவத்திற்குப் பிறகு மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு திரும்ப முடியாமல் தவித்த பெண்ணையும், அவரது பச்சிளங் குழந்தையையும் இராணுவ வீரர்கள் சுமந்து சென்று பாதுகாப்பாகச் சேர்த்தனர்.

பஸல்போரா என்ற இடத்தில் இருந்து துனிவார் என்ற இடம் வரை சுமார் மூன்றரை கிலோ மீற்றர் தூரம் அவர்கள் இந்த இருவரையும் சுமந்து சென்றனர். கிராம மக்களும், மருத்துவமனை செவிலியர் ஒருவரும் அவர்களுக்கு உதவியாக சென்றனர். இராணுவத்தினரின் இந்த மனிதாபிமானமிக்க உதவியை கிராமத்தினர் வெகுவாக பாராட்டினர்.

## உதாம்பூர் பனிப்பிரதேசத்தில் செத்து விழுந்த காக்கைகள்



ஜம்மு காஷ்மீரில் உள்ள உதாம்பூர் பனிப் பிரதேசத்தில் நூற்றுக் கணக்கில் காக்கைகள் செத்து விழுந்தன.

தகவல் அறிந்த வனத்துறை அதிகாரிகள் பனியில் உறைந்து இறந்து கிடந்த 150 காக்கைகளின் உடல்களை பிளாஸ்டிக் பைகளில் சேகரித்து அப்புறப்படுத்தினர்.

அவை இயற்கையான பனிப்பொழிவால் இறந்தனவா அல்லது பறவைக் காய்ச்சல் பரவி இறந்தனவா என பரிசோதனைக் கூடத்தில் அவற்றின் மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

## கொரோனவில் இருந்து மீண்டவர்களிடம் 8 மாதங்கள் நோய் எதிர்ப்பு சக்தி நீடிக்கும்

கொரோனா தொற்றுப் பாதிப்பில் இருந்து மீண்ட நபர்களுக்கு குறைந்தது 8 மாத காலம், அதற்கு எதிரான புதிய நோய் எதிர்ப்பு சக்தி உடலில் தங்கியிருக்கும் என ஆய்வுகள் வாயிலாக தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள லா ஜொல்லா நோய் எதிர்ப்பு ஆய்வு மைய விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில், சிலருக்கு, கொரோனாவுக்கு எதிராக புதிதாக உருவாகிற நோய் எதிர்ப்பு சக்தி மேலும் பல காலம் உடலில் நீடிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

200 பேரிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட உடல் செல்கள் நினைவில் வைத்துக் கொள்வதும், அடுத்த முறை தொற்று ஏற்படாத வகையில் டி.செல்கள் தயார் நிலையில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1990.04.04 | பிறந்த திகதி - 1991.11.17 |
| மதம் - இந்து V | மதம் - இந்து குருகுலம் |
| நட்சத்திரம் - ஆயிலியம் | நட்சத்திரம் - பூரட்டாதி 03 |
| செவ் - ---- | பாவம் - 24 3/4 |
| பாவம் - 25 | செவ் - 12இல் |
| கல்வி - MBBS | கல்வி - HND, IT |
| தொழில் - விரிவுரையாளர் USA | தொழில் - ------ |
| எதிர்பார்ப்பு - USA போகவிரும்பும் பெண் Doctor தேவை | எதிர்பார்ப்பு - அழகான பெண், கனடா OR UK மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# 2 காதலிகளை ஒரே நேரத்தில் திருமணம் செய்த விவசாயி!



### சட்டீஸ்கரில் ருசிகர நிகழ்வு

சட்டீஸ்கரை சேர்ந்த ஒரு விவசாயி ஒருவர் இரண்டு பெண்களை ஒரே நேரத்தில் ஒரே மண்டபத்தில் திருமணம் செய்து கொண்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஜகதல்பூரை சேர்ந்த சந்து மவுரியா என்பவர் சத்தாரி என்ற பெண்ணை செல்போன் மூலம் காதலித்து வந்த நிலையில் ஹசீனா என்ற பெண்ணையும் அவர் காதலித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் மூவரும் கடந்த ஒரு வருடமாக ஒன்றாக வாழ்ந்து வந்த நிலையில் கடந்த 3 ஆம் திகதி உறவினர்கள் புடை சூழ திருமணம் செய்துள்ளனர்.

அவர்களின் இந்த திருமணம் தற்போது சமூக வலைதளங்களில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

வகுப்பு
GERMAN, NETHERLAND (HOLLAND) A1 மொழி வகுப்புகள்
Embassy யின் certificate ற்கு ஏற்றவாறு, தமிழ் மொழிபெயர்ப்புடன் நடத்தப்படுகின்றது.
077 160 4823
Mrs.P.Kajenthini
இல.10, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# ஹொங்கொங் ஜனநாயக ஆர்வலர்கள் கைது விவகாரம்: சீனா மீது பொருளாதார தடை விதிக்க தயாராகும் அமெ!

ஹொங்கொங் ஜனநாயக ஆர்வலர்கள் கைது விவகாரத்தில் ஆத்திரமடைந்துள்ள அமெரிக்கா, சீனா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கத் தயாராகி வருகின்றது.

சீனாவின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங்கில், ஜனநாயகத்தை பறிக்கும் செயற்பாடுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நேற்றுமுன்தினம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமுல்படுத்தப்பட்ட சீனாவின் சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ், அமெரிக்க சட்டத்தரணி உட்பட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட ஜனநாயக



ஆர்வலர்களை ஹொங்கொங் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த கைது நடவடிக்கைக்கு உலக நாடுகள் பலவும் கவலை தெரிவித்துள்ள நிலையில், அமெரிக்கா, சீனா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கவுள்ளதாக எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ கூறுகையில் –

இந்த அடக்குமுறை சீன கம்யூனிஸ்ட் கட்சி தனது சொந்த மக்கள் மற்றும் சட்டத்தை அவமதிப்பு செய்வதை நினைவூட்டுகிறது. ஹொங்கொங் மக்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்துவதில் ஈடுபட்டுள்ள சீன அரசாங்கம், தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான பொருளாதாரத் தடைகள் மற்றும் பிற கட்டுப்பாடுகளை அமெரிக்கா பரிசீலிக்கும்.

அரசியல் அடக்குமுறை பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஓர் அமெரிக்க குடிமகன் கைது செய்யப்பட்ட செய்தியால் நான் அதிர்ச்சி அடைந்தேன்.

நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன் அமெரிக்க குடிமக்கள் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்படுவதையோ அல்லது துன்புறுத்துவதையோ அமெரிக்கா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது. – என கூறினார்.

வர்த்தக போர், தென் சீன கடல் விவகாரம், உய்கூர் இன முஸ்லிம்கள் மீது அடக்குமுறை, கொரோனா வைரஸ் விவகாரம், ஹொங்கொங் பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்களில் சீனாவுக்கும் அமெரிக்காவும் மோதல்நிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நானே சு.கவின்....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில்:– இதனை ஒரு வருடத்துக்கு முன்பே நான் கூறி விட்டேன். தற்போது கட்சியின் தலைவராக இருப்பவர் சட்டவிரோதமாகவே உள்ளார்.

கேள்வி:– இன்றைய நினைவு அஞ்சலி நிகழ்வுக்கு உங்களுக்கு அழைப்பு கிடைக்கவில்லையா?

பதில்:– இல்லை. எந்தவித அழைப்பும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு இந்த இடம் சொந்தமில்லை. நாம் விரும்பிய நேரத்தில் இங்கு வருவோம் – என்றார்.

இதையடுத்து மலரஞ்சலி செலுத்திய முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவிடமும் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர்.

கேள்வி:– தானே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்றும், நீங்கள் சட்டவிரோதமாகவே தலைவர் பதவியில் இருப்பதாகவும் சந்திரிகா கூறுகின்றார். உங்கள் பதில் என்ன?

பதில்:– அப்படியில்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்தே செயற்படுகின்றோம் எமக்குள் பிளவுகள் இல்லை.

கேள்வி:– தொடர்ந்தும் அரசுடன் இணைந்து பயணிப்பீர்களா? சுதந்திரக் கட்சி கலக்கமடைந்துள்ளதா?

பதில்:– இன்னும் காலமுண்டு. பார்க்கலாம் – என்றார்.

## ஆறு லட்சம் டோஸ் மொடர்னா தடுப்பு தடுப்பூசி கொள்வனவு செய்யும் ஸ்பெயின்!



அமெரிக்க நிறுவனத்தின் ஆறு லட்சம்டோஸ்மொடர்னாகொரோனா வைரஸ் தடுப்பூசியைக் கொள்வனவு செய்ய, ஸ்பெயின் தீர்மானித்துள்ளது.

இந்த மொடர்னா கொரோனா வைரஸ்தடுப்பூசிகள், அடுத்த ஆறு வாரத்தில் வந்தடையும் என ஸ்பெயின் சுகாதாரத் துறை அமைச்சர் சால்வேடார் தெரிவித்துள்ளார்.

அதுவரையில் மக்கள் பொதுவான விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். ஸ்பெயினில் கொரோனா வைரஸ் தொற்று கடந்த சில நாள்களாக அதிகரித்து வருகின்ற நிலையில், அங்கு தடுப்பு மருந்தை விரைவாகக் கொண்டு வரும் பணியில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருகின்றது.

மொடர்னா நிறுவனம் உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பூசி நல்ல பலன் அளிப்பது பரிசோதனையில் உறுதியாகியுள்ளதால் அந்த தடுப்பூசி அமெரிக்கா, கனடா உட்பட பல நாடுகளில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 27 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஐரோப்பிய ஒன்றியம், மொடர்னா நிறுவனத்தின் கொரோனா தடுப் பூசியைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது.

## உலகளவில் கொரோனா சாவு 19 லட்சத்தைத் தாண்டியுள்ளது!

உலகளவில் கொடிய கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந் தொற்றால், மொத்தமாக 19 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் மொத்தமாக எட்டு கோடியே 84 லட்சத்து 99 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆறு கோடியே 36 லட்சத்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் –19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.

அடுத்தபடியாக அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளாக முறையே இந்தியா, பிரேஸில், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன.



# கொழும்பில் நேற்று மாத்திரம் 226 கொரோனா தொற்றாளர்!

கொழும்பு, ஜன.08

இலங்கையில் நேற்று (வியாழக்கிழமை) கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 532 பேரில் 226 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவிசாவலை பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் ஊழியர்கள் 35 பேர் நேற்றைய தினம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 14 பேரும், யாழ் மாவட்டத்தில் 08 பேரும், தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# வாள் முனையில் கொள்ளையர் 12 பவுண் நகைகள் திருட்டு!

வவுனியா - வேப்பங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த முகமூடி கொள்ளையர்கள் அங்கிருந்து 12 பவுண் நகையையும் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் வாள் முனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) இரவு 11 மணியளவில் இந்தப் பகுதியிலுள்ள வீடொன்றிற்குள் நுழைந்த கொள்ளையர்கள், வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளனர்.

இதன்போது அங்கு உறங்கிக்கொண்டிருந்த முதியவரையும் பெண்மணியையும் வாள் முனையில் அச்சுறுத்தி, தாலிக்கொடி உட்பட தங்க நகைகளையும், 15 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

இதேவேளை மற்றைய அறையில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணொருவர் சத்தம் கேட்டு வெளியில் எழுந்துவந்த நிலையில் அவர் அணிந்திருந்த தங்க நகைகளையும் பறித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று நபர்கள் ஈடுபட்டனர் எனவும் அவர்கள் முகமூடி அணிந்திருந்ததுடன், வாள்களையும் கையில் வைத்து அச்சுறுத்தி உள்ளனர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக கூறியுள்ள பொலிஸார், மொத்தமாக 12 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர்

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக குற்றத் தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரணீத் திசாநாயக்க தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உடுவில் பகுதியில் வன்முறைக் கும்பல் அட்டூழியம் சந்தேகநபர்களைத் தேடிப் பொலிஸார் வலைவீச்சு!

உடுவில் - அம்பலவாணர் வீதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல், அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வயோதிபப் பெண்ணும் அவருடைய மகனும் வசிக்கும் வீட்டிலேயே இந்தத் தாக்குதலை வன்முறைக் கும்பலொன்று, நேற்று (வியாழக்கிழமை) இரவு 9.30 அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

5 மோட்டார் சைக்கிள்களில் வந்த 10 பேர், முகத்தை மூடிக் கட்டியவாறு வீட்டுக்குள் புகுந்து பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட உடைமைகளைத் தாக்கிச் சேதப்படுத்தி அட்டூழியத்தில் ஈடுபட்டு விட்டுத் தப்பித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்து வாடகை வீடு எடுத்து நீண்டகாலமாக வசிக்கும் தாயும் மகனும் எந்தவொரு பிரச்சினைக்கும் செல்வதில்லை என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், தாக்குதல் நடத்திய கும்பல், தாய் மற்றும் மகன் மீது தாக்குதல் நடத்தாமல் அச்சுறுத்தும் வகையில் உடைமைகளைச் சேதப் படுத்திவிட்டுத் தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட போது, சுமார் ஒரு மணிநேரமாக பொலிஸார் அங்கு வருகை தரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், சந்தேகநபர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 261 இலங்கையர்கள் நாடு திரும்பினர்!

கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 261 இலங்கையர்கள் இன்று(வெள்ளிக்கிழமை) நாடு திரும்பியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து 29 பேரும், கட்டாரிலிருந்து 30 பேரும், ஜப்பானிலிருந்து 45 பேரும், ஆஸ்திரேலியாவிலிருந்து 157 பேரும்,கட்டு நாயக்க விமான நிலையத்தை இன்று காலை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். இது தவிர மேலும் 365 பேர் இன்றையதினம் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனிலிருந்து 159 பேரும், மாலைதீவிலிருந்து 30 பேரும், இத்தாலியிலிருந்து 32 பேரும், பங்களாதேஷிலிருந்து 10 பேரும், மலேசியாவிலிருந்து 05 பேரும், தென்னாபிரிக்காவிலிருந்து 35 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 75 பேரும், சிங்கப்பூரிலிருந்து 19 பேரும் இன்றைய தினம் வருகை தரவுள்ளனர்.

# தொல்லியல் திணைக்களமே வரலாற்றைத் திரிபுபடுத்துகிறது

## நெடுந்தீவு பிரதேச செயலாளர் விசனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.08

நெடுந்தீவில் வரலாற்றைப் பாதுகாக்க எனக் கூறி வர்த்தமானி மூலம் இடத்தை உரிமை கோரும் தொல்லியல் திணைக்களமே வரலாற்றையும் திரிவு படுத்துவதாக நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவை சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைச் சுட்டிக் காட்டினார்.

நெடுந்தீவுப் பிரதேசத்திலே ஒரே இடத்திற்கு 3 தடவைகள் தொல்லியல் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது. இவற்றின்போது அளவீடுகள் மாறுபட்டால் பரவாயில்லை.

ஆனால் இடத்தின் வரலாற்று தொன்மையை பாதுகாப்பதே தொல்லியல் திணைக்களத்தின் முக்கியமான பணியாக காணப்படுகின்றபோதும் தொல்லியல் திணைக்களமே வரலாற்றை மாற்றுகின்றது.

இதனை உதாரணத்துடன் கூற முடியும். அதாவது நெடுந்தீவில் காணப்படும் வெடியரசன் கோட்டையை வெடியரசன் கோட்டை என்ற சரியான பெயருடன் 2004.02.23 அன்று வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பின்பு இதே இடத்தை ஒட்டி 2011.12.30 அன்று தூப என்னும் பெயரில் வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது. தற்போது 2020.11.28 இல் மீண்டும் இதே திணைக்களம் துறவிகள் மடம் என்ற பெயரில் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

அவ்வாறானால் அந்த இடத்தின்பெயரை தொல்லியல்திணைக்களம் திரிபு படுத்துவதாக மக்கள் கருதுகின்றனர். - என்று தெரிவித்தார் பிரதேச செயலாளர்.

# விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்குத் தொற்று



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்று (வியாழக்கிழமை) நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படாத நிலையில், அவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என சி.ஐ.டியினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

ஹிஜாஸ்ஹில்புல்லா கடந்த வருடம் ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட நபருடன் தொலைபேசியில் உரையாடினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=





லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால்மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2021இல் வெளியிடப்பெற்றது.